Under Section 173 BNSS

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8165164

1. District : Thiruvallur. மாவட்டம் PS: Vigilance & Anti-corruption. காவல்நிலையம் Year: 2024 ஆண்டு FIR No.: 15/AC/2024/TVL மு.த.அ. எண் Date: நாள் on 17/9/2024 at about 04.30 hrs

2. (i) Act சட்டம்: BNSS & Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: U/s. 108 BNSS r/w 7 and 12 of
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: PC (Amendment) Act, 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 16/9/2024 Date to : நாள் வரை 17/9/2024
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் at about 16.15 hrs. Time to : நேரம் வரை at about 03.00 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் On 17/9/2024 Time : நேரம் 04.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17/9/2024 Time : நேரம் at about 04.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East – about 55 kms.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Ponneri Sub-Registry, Thiruvallur District
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. J. Shankar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Jayaraman
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 years (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Special Tahsildar (LA-Unit-IV), Chennai Peripheral Ring Road Project, Thiruvallur (g) Address : முகவரி (I/c) District Inspection Deputy Cell Officer, Thiruvallur @ Kanchipuram.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Accused-1. Tr. S. Kumaresan, Sub-Registrar, Accused-2 Tr. Jayakumar, Data Entry Operator, Ponneri Sub-Registry, Thiruvallur District, Accused-3 Tr. Vinoth, private Individual, Ponneri and others.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—Nil— On the findings of Joint surprise check.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
seized unexplained and unclaimed amount Rs. 4,03,280/- during joint surprise check.

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அறிக்கை சமர்ப்பிக்கிறேன்! இன்று 17/9/2024-ந்தேதி அதிகாலை சுமார் 05:30
மணிக்கு நான் நிலைய அலுவலகத்திலிருந்தபோது, திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் சென்னை
கண்காணிப்பு மாநில காவல் துணை கண்காணிப்பாளர் (பொ.ம-அலகு-IV), சென்னை வேலை
அமைத்த, திரு.ஜெ.சங்கர் தனி அலுவலர் மற்றும் கூடுதல் தொகுதி சாவட்ட துணை மேலாளர்
சாலைக்கிட்ட, திருவள்ளூர் மற்றும் கூடுதல் காவல்துறை அலுவலர் கொண்ட
குழு அலுவலர், திருவள்ளூர், இணை காவல்நிலைய அலுவலர் கொண்டு அனுப்பிய
புகாரை பெற்று, அதன்பேரில் முதல் தகவல் அறிக்கையின் மனுவின்
உத்தரவின்பேரில், பாதி வழக்கு தகவல் அறிக்கையின் மனுவின்
விவரம் வருமாறு.

[FIR Contents Continue to the next page.....]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ......W.B. Tamizharasi...... Rank ......Inspector...... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.........V&AC, Thiruvallur.........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 17/9/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: On 17/9/2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 05-00 hrs.

Name: பெயர் [W.B. TAMIZHARASI]
Rank: நிலை INSPECTOR, V&AC No. எண் .........

INSPECTOR OF POLICE,
VIGILANCE & ANTI-CORRUPTION
Thiruvallur - 602 001.

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அனுப்புநர் திரு.J.சங்கர், தனி வட்டாட்சியர் (நி.எ-அலகு-4), சென்னை எல்லை சாலைத்திட்டம், திருவள்ளூர் ஓ (I/c.) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருவள்ளூர், இருப்பு காஞ்சிபுரம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு ஓ கண்காணிப்புத்துறை, திருவள்ளூர். ந.க. 173/2024 நாள்.17.09.2024. அய்யா, பொருள்:-திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - பொன்னேரி - சார் பதிவாளர் அலுவலகம் - திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான நடவடிக்கை எடுக்கக்கோரி - கடிதம் - அளித்தல் சம்மந்தமாக. பார்வை:- திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறைகள், நாள்- 16.09.2024 முதல் 17.09.2024 வரை. திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக பொது மக்களிடமிருந்து ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக தொடர்ந்து மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கற்பட்டு மாவட்டங்கள், இருப்பு காஞ்சிபுரம் அவர்களுக்கும், திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில், கடந்த 16.09.2024-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான என் தலைமையில், திருவள்ளூா மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மாலை சுமார் 04.15 மணி முதல் 17.09.2024-ந்தேதி அதிகாலை சுமார் 03.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் கூட்டுச்சோதனையின்போது அலுவலகத்தில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் ரூ.28,000/-, Data Entry Operator திரு.ஜெயக்குமார் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,000/-, புரோக்கர் திரு.வினோத் என்பவர் வைத்திருந்த பணம் மொத்தம் ரு.34,720/-, திரு.தணிக்காச்சலம், வ/42, த/பெ. மணி, எண்.12, பெருமாள் கோவில் தெரு, அம்பத்தூர், சென்னை-52 என்பவரிடமிருந்து ரூ.5,000/-, திரு.A.கிருஷ்ணமூர்த்தி, வ/47, த/பெ.கேசவலு, எண்.25, கிருஷ்ணபுரம், பொன்னேரி என்பவரிடமிருந்து ரூ.3,500/-, திரு.N.சிவக்குமார், வ/45, த/பெ.நாதன், எண்.213, பெருமாள் கோவில் தெரு, கன்னிகைப்பேர், ஊத்துக்கோட்டை தாலுக்கா திருவள்ளூர் மாவட்டம் என்பவரிடமிருந்து ரூ.67,500/-, திரு.P.பதம்சந்த் கிச்சா, வ/54, த/பெ. புக்குராஜ் கிச்சா, North Town Appartments, பெரம்பூர், சென்னை-112 என்பவரிடமிருந்து ரூ.49,600/- மற்றும் திரு.அனிஷ், வ/41, த/பெ. நாராயணன் குட்டி, எண்.204, M.P.M. தெரு, வியாசர்பாடி, சென்னை-39 என்பவரிடமிருந்து ரூ.13,960/- ஆக மொத்தம் பணம் ரூ.2,03,280/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், கைப்பற்றப்பட்ட நபர்களை

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL u/s 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)**

விசாரித்து வாக்குமூலத்தை பதிவு செய்தும், அவர்களிடமிருந்து அவர்கள் தரப்பு விளக்கங்களை அவர்கள் கைப்பட எழுதி கொடுத்த கடிதங்கள் மற்றும் அலுவலகத்தின் வருகைப்பதிவேட்டின் நகல், கையிருப்புப்பதிவேட்டின் நகல் மற்றும் கடந்த 16.09.2024-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரப்பதிவுகளின் விவரங்கள் அடங்கியதன் "A" account-ன் நகல்களில் சார்பதிவாளரின் சான்றொப்பம் மற்றும் என்னுடைய கையொப்பம் அடங்கியவற்றையும், மேலும் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத மற்றும் உரிமைகோராத பணம் ரூ.2,03,280/- (500X395, 200X14, 100X27, 50X4 & 20X4)-ஐ பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சம் பணம் என முடிவு செய்து அது தொடர்பான நபர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ள தங்களிடம் ஒப்படைக்கிறேன். கையொப்பம் (ஜெ.சங்கர்), தனிவட்டாட்சியர், (நில எடுப்பு-அலகு-IV), சென்னை எல்லை சாலைத்திட்டம், திருவள்ளூர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு), திருவள்ளூர். **இணைப்பு** - 1) ரொக்கம் ரூ.2,03,280/- (இரண்டு லட்சத்து மூன்றாயிரத்து இருநூற்று எண்பது ரூபாய்). 2)செயல்முறை ஆணை அசல். 3) பணம் கைப்பற்றப்பட்ட நபர்கள் மற்றும் அலுவலர்களின் விளக்கக்கடிதங்கள் (12), 4) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் (8) மற்றும் 5) அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களின் சான்றொப்பமிட்ட நகல்கள். அதில் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவின் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.M.E.இராமச்சந்திரமூர்த்தி அவர்களால் எனக்கு வழக்குப்பதிவு செய்ய உத்திரவிடப்பட்டு கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. மேலும் பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் திடீர் கூட்டுத்தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறையின் விவரம் வருமாறு- திருவள்ளூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (இருப்பு) காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை திடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள். முன்னிலை:-திரு.**J.**சங்கர், ந.க.எண்.173/2024 , நாள்:- **16.09.2024.** பொருள்:- திடீர் கூட்டாய்வு - திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் - ஊழல் தடுப்பு மற்றும கண்காணிப்பு பிரிவு - பொன்னேரி - சார்பதிவாளர் அலுவலகம் - 16.09.2024-ந்தேதி திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பான- செயல்முறைகள். **ஆணை:-** திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்வதற்காக பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மற்றும் புரோக்கர்கள் மூலம் பொன்னேரி சார்பதிவாளர் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில், இன்று 16.09.2024-ந்தேதி மேற்படி அலுவலகத்தில் இருத்துறை திடீர் கூட்டுத்தணிக்கைச் செய்ய மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.ஜெ.சங்கர், தனிவட்டாட்சியர் (நில எடுப்பு-அலகு-IV), சென்னை எல்லை சாலைத்திட்டம், திருவள்ளூர், மற்றும்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மு.இ.இராமச்சந்திரமூர்த்தி, காவல் ஆய்வாளர் திருமதி.ஜி.எஸ்.தமிழரசி மற்றும் குழுவினர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று 16.09.2024-ந்தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு மாலை சுமார் 04.00 மணிக்கு பொன்னேரி இரயில்வே ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் வந்து வாகனங்கத்தை நிறுத்திவிட்டு இறங்கி நடந்து சென்று, ஆங்காங்கே குழுவினருடன் சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்துக்கொண்டிருந்தபோது, மேற்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பொதுமக்கள் உள்ளே சென்று பத்திரப்பதிவு செய்வதும், ஆவணப்பதிவாளர்கள் அலுவலகத்திற்கு உள்ளே சென்று வருவதுமாக பத்திரப்பதிவு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது மாலை சுமார் 04.15 மணியளவில் பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளே குழுவினருடன் சென்றபோது, அலுவலகத்தின் பொதுமக்கள் அமர்வதற்காக போடப்பட்டிருந்த கூரை மற்றும் வாராண்டாவில் நின்றுக்கொண்டிருநத பொதுமக்களையும், சிலர் விஜிலென்ஸ் போலீஸார் என அடையாளம் தெரிந்து வெளியே ஓட முயற்சி செய்தவர்களையும் உள்ளே அழைத்துவந்து, சார்பதிவாளர் அறையில் இருந்த நாற்காலிகளில் அமரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவர்கள் அனைவரையும் குழுவினர் உதவியுடன் இருக்கையில் அமரசெய்தோம். பின்னா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான் சார்பதிவாளர் மற்றும் அனைவரிடமும் என்னை அறிமுகம் செய்துக்கொண்டும், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் திருவள்ளூர் விஜிலென்ஸ் பார்ட்டிகளையும் அறிமுகம் செய்து வைத்து, திடீர் கூட்டுத்தணிக்கை செய்ய வந்துள்ளதாக கூறி அனைவரையும் சோதனை செய்ய ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டு சோதனை செய்ய முயற்சித்தபோது, ஒருவர், திடீரென அலுவலகத்திலிருந்து வெளியே ஓட முயற்சி செய்தவரை பிடிக்க துரத்தியதில், அவரது பாக்கெட்டிலிருந்த பணம் மற்றும் ஒரு கருப்புநிற கவரையும் சேர்த்து வேகமாக சார்பதிவாளர் அலுவலக சுற்றுச்சுவருக்கு வெளியே கிழக்கு பக்கமாக தூக்கி எறிந்தார். அதிலிருந்து சில ரூபாய் நோட்டுகள் உட்புறமாகவும், கருப்பு நிற கவர் கிழக்கு பக்கம் வெளியேயும் விழுந்தது. அதனை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான நானும் காவல் துணை கண்காணிப்பாளரும் சேர்த்து சிதறிய பணத்தை எடுத்துக்கொண்டு, வெளிப்புறம் சென்றுப்பார்த்ததில், அங்கு பொன்னேரி நகர கிராம நிர்வாக அலுவலரின் அலுவலம் இருந்தது. அதன் படிக்கட்டில் ஒருவர் அமர்ந்துக்கொண்டு பணத்தை எண்ணிக்கொண்டிருந்தவரை விசாரித்தபோது, அவர் பெயர் சீனிவாசன், வயது-47, த/பெ. நாராயணன், எண்.1/52,

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL, 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) 2018 Continuous...)**

கூடுவாஞ்சேரி கிராமம், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்றும், தான் பொன்னேரி நகர கிராம உதவியாளராக பணிபுரிவதாகவும், அலுவலக படிக்கட்டில் உட்கார்ந்திருந்தபோது, சார்பதிவாளர் அலுவலக மதில் சுவரை தாண்டி ஒரு கவரும் அதிலிருந்து மூன்று ரூபாய் சிறிய கட்டுகள் வந்து விழுந்ததாகவும், அதனை எடுத்து எண்ணிப்பார்த்துக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அதனை வாங்கி எண்ணிப்பாக்க ஒரு கட்டில் ரூ.18,000/- (500x36) யும், மற்றொரு கட்டில் ரூ.10,000 (500x20) யும், அடுத்த கட்டில் ரூ.1,400 (500x2, 200x1, 100x2) என மொத்தம் ரூ.29,400/- அப்பணத்தை கிராம உதவியாளரிடமிருந்து விசாரணைக்காக கைப்பற்றப்படடது. கிராம உதவியாளர் திரு.சீனிவாசன் அவர்களை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைத்து விசாரணை செய்து அவர் நடந்த விவரங்கள் குறித்து அவரது கைப்பட விளக்கமாக எழுதிக்கொடுத்தார். உள்பக்கம் விழுந்த பணத்தினை எண்ணிப்பார்க்க அதில் ரூ.3,600/- இருந்தது. ஆக மொத்தம் ரூ.33,000/-ம் இருந்தது. பணத்தினை வீசி எறிந்துவிடடு ஓட முயற்சி செய்த நபரை குழுவினர் உதவியுடன் பிடித்து விசாரணை செய்ய, அவர் தன்னுடைய பெயர் வினோத், வயது-36, த/பெ.ஜெயராமன் என்றும், தன்னுடைய வீட்டு முகவரி எண்.3, இரயில்வே ஸ்டேசன் ரோடு, வேம்பாக்கம், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம் என்றும், தான் ஆவண எழுத்தர்களுக்கு புரோக்கராக வேலை செய்வதாகவும், ஆவண எழுத்தர்கள் கொடுக்கும் ஆவணங்களை, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எடுத்து வந்து அலுவலக பணியாளர்களுக்காக ஆவண எழுத்தர்கள் கொடுக்கும் பணத்தினை சார்பதிவாளருக்கு மாலை நேரத்தில் கொண்டுவந்து கொடுப்பேன் என்றும், அதுபோல இன்று ஆவண எழுத்தர்கள் கொடுத்த பணம் ரூ.33,000/-த்தை தனித்தனியே ரப்பர் பேண்டு போட்டு ஒரு பாலத்தீன் கவரில் வைத்து சார்பதிவாளர் அவலகத்தில் பணியாளர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்தபோது, விஜிலென்ஸ் போலீஸார் வந்துவிட்டதாலும், சோதனை செய்தால் மாட்டிக்கொள்வோம் என்ற பயத்தில், அதை மறைக்க முடியாமல் பணம் வைத்திருந்த கருப்பு நிற பாலித்தீன் கவரை வ்சி எறிந்து விட்டு ஓடி விடலாம் என எத்தணித்தபோது, போலீஸார் தன்னை மடக்கி பிடித்து விட்டதாகவும் தெரிவித்தார். அவரை சோதனை செய்தபோது, அவருடைய சட்டையில் ரூ.1,720/- இருந்தது. அது குறித்து கேட்டபோது, அவர் உரிய விளக்கம் அளிக்கவில்லை. அதனால் திரு.வினோத் அவர்கள் வைத்திருந்த மொத்தப்பணம் ரூ.34,720/-ஐ சார்பதிவாளருக்கு லஞ்சமாக ஆவண எழுத்தர்கள் கொடுத்த பணத்தை கொடுக்கவே கொண்டுவந்துள்ளதாக உறுதி செய்து கைப்பற்றினேன். பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே சார்பதிவாளர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க அவர் தன்னுடைய பெயர் திரு.ச.குமரேசன், வயது-52, த/பெ.சதாசிவம்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

என்றும், அவர் பொன்னேரி சார்பதிவாளராக 14.07.2023 முதல் பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். தன்னுடைய சொந்த ஊர் சேலம் மாவட்டம் என்றும், அவர் பிளாட் எண்.213G. S.K.City Phase-2, தாசநாயக்கன்பட்டி, சேலம் மாவட்டம் என்ற முகவரியில் குடும்பத்துடன் வசித்துவருவதாகவும், தற்போது பொன்னேரி கச்சேரி ரோட்டில் ஒரு வீடு வாடகைக்கு எடுத்து தான் மட்டும் தங்கி உள்ளதாகவும் தெரிவித்தார். அவரிடம் என்னை அறிமுகம் செய்துக்கொண்டு, என்னுடன் வந்திருந்த காவல் துணைக் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரை அறிமுகம் செய்து வைத்து அவர்களுடைய அடையாள அட்டையை காட்டியும், சுய பரிசோதனை செய்து காட்டியும், மேற்படி அலுவலகத்தை கூட்டுத் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தெரிவித்து ஒத்துழைப்பு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. சார்பதிவாளர் அவர்களிடம் அலுவலக பணியாளர்கள் குறித்து விசாரணை செய்ய, இணை சார்பதிவாளர் திருமதி.கீதா அவர்கள் அயல்பணியாக (Deputation Duty) சென்றுள்ளதாகவும், உதவியாளர்கள் திருமதி.கலா, திருமதி.துர்கா மற்றும் இளநிலை உதவியாளர் திருமதி.நந்தினிப்ரியா ஆகியோர்களும் அயல்பணியாக (Deputation Duty)சென்றுள்ளதாகவும், அலுவலகத்தில் சிக்மா என்ற தனியார் நிறுவனம் மூலம் பணிபுரியும் மூன்று Data Entry Operator களும் ஒரு IP Camera Operator மட்டுமே பணிபுரிவதாகவும் தெரிவித்து, அலுவலகத்தை சோதனை செய்ய ஆட்சேபணை ஏதுமில்லை என தெரிவித்தார். பின்னர் அலுவலகத்தில் வாராண்டாவில் அமரவைக்கப்பட்டிருந்த பொதுமக்களை விசாரணை செய்தவிவரம் கீழ்க்கண்டவாறு:-

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | வைத்திருந்த பணம் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | திரு.R.காளமேகம், வ/53, த/பெ.ரங்கராஜன், எண்.2, ஸ்ரீராகவேந்திர தெரு, தசரதன் நகர், டி.வி.புரம், பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம். | ரூ.2,006/- | தன்னுடைய ஜீனியருக்கு பீஸ் கொடுப்பதற்காக வைத்திருந்தாக கூறினார். எனவே அந்த பணம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. |
| 2. | திரு.சதீஷ்குமார், வ/33, த/பெ.தனசேகர், எண்.24, நியூ கச்சேரி ரோடு, பொன்னேரி. | ரூ.7,100/- | தன்னுடைய சொந்த பணம் ரூ.2,000/- என்றும், மீதிப்பணம் கோர்ட்டு ஆர்டர் பதிவு செய்ய பதிவுக்கட்டணம் செலுத்துவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. |

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL u/s 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)**

| | | | |
|---|---|---|---|
| 3. | திரு.S.சேகர், வ/24, த/பெ.சுப்பரமணி, எண்.8, வேலுகோபால் தெரு, சாந்தி நகர், இராமாபுரம், சென்னை-89 | ரூ.16,500/- | தான் சென்டில்மெண்ட ஆவணம் செய்வதறகாக பத்திரப்பதிவு அலுவலகம் வந்ததாகவும், தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால். அவரது ஆவணங்களை சரிப்பார்த்து அப்பணத்தை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. |
| 4. | திரு.S.ரமேஷ், வ/32, த/பெ.செல்வம், வேதகிரி தெரு, பொன்னேரி. | ரூ.3,460/- | தன்னுடைய வாடிக்கையாளர் குடும்பத்தின் செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்வதற்காக வந்திருந்ததாகவும், பணம் தன்னுடைய சொந்தபணம் என்று தெரிவித்ததால், விசாரணைக்கு பின்னர் அந்த பணத்தை அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 5. | திரு.M.சங்கர், வ/54, த/பெ.முனுசாமி, எண்.14, வேலகிரி முதலியார் தெரு, பெரியகாவனம், பொன்னேரி. | ரூ.8,140/- | தன்னுடைய குடும்ப செட்டில்மெண்ட செய்வதற்கு வந்திருந்ததாகவும், பணம் சொந்த செலவிற்காக எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவரை விசாரணை செய்து அந்த பணத்தை அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 6. | திரு.சேர்மராஜ், வ/55, த/பெ.அருணாச்சல பாண்டியன், எண்.10, 3 வது குறுக்கு தெரு, அசோக அவென்யூ, கொளததூர், சென்னை-52. | ரூ.1,100/- | தான் ஆவணப்பதிவிற்காக வந்திருந்ததாகவும், பணம் தன்னுடைய சொந்த பணம் என்று தெரிவித்தார். அவரை விசாரணை செய்து அந்த பணத்தை அவரிடமே கொடுக்கப்பட்டது. |
| 7. | திரு.தணிகாசலம், வ/42, த/பெ.மணி, எண்.12, பெருமாள் கோவில் தெரு, அம்பத்தூர், சென்னை-52 | ரூ.4,400/- ரூ.5,000/- | தன்னுடைய முதலாளி திரு.சூர்யபிரகாஷ் அவர்களுடைய பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவண எண்.8455/2024 பெற்று செல்வதற்காக காத்திருந்ததாகவும், தன்னுடைய சொந்த பணம் ரூ.4,400/- என்று தெரிவித்தார். எனவே அந்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. தனியாக வைத்திருந்த பணம் ரூ.5,000/-ம் குறித்து உடனடியாக விளக்கம் கொடுக்கமால், சிறிது நேரம் கழித்து சீட்டு கட்டுவதற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்று கருதி ரூ.5,000/-ம் கைப்பற்றப்பட்டது. |
| 8. | திரு.A.கிருஷ்ணமூர்த்தி, வ/47, த/பெ.கேசவலு, எண்.25, கிருஷ்ணபுரம், பொன்னேரி. | ரூ.3,500/- | அவர் வைத்திருந்த பணம் ரூ.3,500/- உடனடியாக விளக்கம் கொடுக்கமால், சிறிது நேரம் கழித்து, வீட்டிற்கு மளிகைப்பொருட்கள் வாங்குவதற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்று கருதி ரூ.3,500/-ம் கைப்பற்றப்பட்டது. |

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

| | | | |
|---|---|---|---|
| 9. | திரு.N.சிவக்குமார், வ/45, த/பெ.நாதன், எண்.213, பெருமாள் கோவில் தெரு, கன்னிகைப்பேர், ஊத்துக்கோட்டை தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் | ரூ.67,500/- | இன்று தன்னுடைய பெயரில் பொது அதிகார பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்குரிய Mediator செலவிற்கு கொடுக்க கொண்டுவந்திருந்ததாகவம் தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்று கருதி ரூ.67,500/-ம் கைப்பற்றப்பட்டது. |
| 10. | திரு.P.பதமசந்த் கிச்சா, வ/54, த/பெ.புக்குராஜ் கிச்சா, North Town Appartments, பெரம்பூர், சென்னை-112 | ரூ.49,600/- | மனைவிற்பனை தொடர்பாக பத்திரம் பதிவு செய்ய வந்திருந்ததாகவும், பணம் சொந்த செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்று கருதி ரூ.49,600/-ம் கைப்பற்றப்பட்டது. |
| 11. | திரு.அனிஷ், வ/41, த/பெ.நாராயணன் குட்டி, எண்.204, M.P.M. தெரு, வியாசர்பாடி, சென்னை-39 | ரூ.13,960/- | தான் தணிகை ரியல் எஸ்டேட் மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை பெறுவதற்காக காத்திருந்ததாகவும், பணம் தன்னுடைய நிறுவனத்திற்கு உரிய பணம் என்று தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் கையூட்டாக கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என்று கருதி ரூ.13,960/-ம் கைப்பற்றப்பட்டது. |

மேற்படி 1 முதல் 11 வரை பொதுமக்கள் அனைவரும் தனிதனியாக நான் விசாரணை செய்து, அவர்கள் வாக்குமூலம் எழுதிக்கொடுத்தார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். வரிசை எண்.1 முதல் 6 வரையான விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 7 முதல் 11 வரை உள்ளவர்களுடைய பணம் அவர்களுடைய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் குழுவினருடன் சார்பதிவாளர் இருக்கைக்கு முன்புறம் இருந்த மேஜையை சோதனை செய்ய கணிணி பொறுத்தப்பட்டிருந்தது. மேஜையின் மீது பத்திரப்பதிவுக்காக தாக்கல் செய்யப்பட்ட சில ஆவணங்கள் இருந்தன. மேற்படி ஆவணங்களை பதிவு செய்துக்கொண்டிருப்பதாக சார்பதிவாளர் திரு.குமரேசன் அவர்கள் தெரிவித்தார். மேலும் அவரை சோதனை செய்தபோது, அவருடைய சட்டை பாக்கெட்டில் ரூ.800/- பணம் இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, காலை அலுவலகத்திற்கு வந்தபோது செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தார். மேலும்,

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அலுவலகத்தில் பராமரிக்கப்படும் தனிநபர் பதிவேட்டில் பார்வையிட்டபோது, அதில் ரூ.800/- குறிக்கப்பட்டிருந்தது. எனவே, அந்த பணம் மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவருடைய வலதுப்புறம் சிறிய மரபெஞ்சில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த வழிக்காட்டு மதிப்பீடு தொடர்பான ஆவணங்களுக்கு இடையே அங்கிருந்த நபர் எதையோ வைக்க முயற்சித்த நேரம் அவரை தடுத்ததில் அவர் கையில் இரண்டு 500 ரூபாய் நோட்டுகள் என ரூ.1,000/- வைத்திருந்தவரை விசாரித்தபோது, அவர் இந்த அலுவலகத்தில் அவர் பெயர் R.ஜெயக்குமார், வயது-40, த/பெ.ராகவன் என்றும், தனது வீட்டு முகவரி எண்.328, டாக்டர் அம்பேத்கர் தெரு, அத்திப்பட்டு கிராமம், சென்னை-120 என்றும், தான் 01.02.2024-ஆம்தேதி முதல் இந்த அலுவலகத்தில் Data Entry Operator (DEO)-ஆக பணிபுரிவதாகவும், பதிவுக்கு வரும் ஆவணங்களுக்கான பில் போடும் வேலைகளை பார்த்துக்கொண்டிருந்ததாக தெரிவித்தார்.என்றும் அவர் இந்த அலுவலகத்தில் டேட்டா என்ட்ரி ஆப்ரேட்டராக பணிபுரிவதாகவும், பணப்பதிவேட்டில் என்ட்ரி போடாததால், மாட்டிக்கொள்வோம் என்பதால் மறைத்துவிட முயற்சித்ததாக தெரிவித்த பணம் ரூ.1,000/-ஐ கணக்கில் வராத பணம் என கைப்பற்றப்பட்டது. பின்னர் அதே அறைகளை சோதனை செய்தபோது, ஆவணங்களுக்கிடையே பணம் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எடுத்து எண்ணிப்பார்த்தபோது, அதில் ரூ.2,000/- (500x3=1500, 100x5=500) இருந்தது. அந்த பணம் குறித்து சார்பதிவாளர் திரு.குமரேசன் அவர்களிடம் கேட்டபோது, இந்த பணம் ஆவணங்களுக்கிடையே யார் வைத்தது என்ற விவரம் தனக்கு தெரியாது என்று கூறினார். மேற்படி பணத்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார்பதிவாளர் இருக்கைக்கு இடதுப்புற இருக்கையில் அமர்ந்திருந்த நபரைப்பற்றி விசாரிக்க என்னுடைய பெயர் ருத்ரகோட்டீஸ்வரன், வயது-37, த/பெ. பாலசுப்பிரமணியம் என்றும், தன்னுடைய வீட்டு முகவரி எண்.135, சிவன் கோவில் தெரு, கோலூர் கிராமம், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்றும், மேற்படி அலுவலகத்தில் பிப்ரவரி/2024 முதல் தான் Data Entry Operator-ஆக பணிபுரிந்து வருவதாகவும், பதிவுக்காக ஆவணங்களை தாக்கல் செய்யும் நபர்களை புகைப்படம் எடுத்தல் மற்றும் கைரேகை எடுத்தல் போன்ற பணிகளை செய்துக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். அந்த மேஜையினை சோதனை செய்ய, கேமரா பொறுத்தப்பட்டிருந்த கணிணி மற்றும் கைரேகை உள்ளீடு இயந்திரம் இருந்தது. அவரை சோதனை செய்தபோது, அவருடைய பர்ஸில் ரூ.350/- பணம் வைத்திருந்தார். அந்த பணம் குறித்து கேட்டபோது, செலவுக்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அந்த பணத்தை மீண்டும் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். அதனை அடுத்து பதிவறையில் சோதனை செய்தபோது, அதில் மரத்தால் செய்யப்பட்ட பெரிய

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

அளவிலான அலமாரியில் பழைய ஆவணங்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்தன. அதில் கைப்பற்றப்படக்கூடிய பொருட்கள் ஏதும் இல்லை. பதிவறைக்கு அடுத்து போடப்பட்டிருந்த இருக்கையில் இருந்த நபரை விசாரிக்க, அவர் திருமதி.B.காமாட்சி, வயது-44, க/பெ.பாபு என்றும், தனது வீட்டு முகவரி பாலாசுப்பிரமணிய நகர், ஆரணி, திருவள்ளூர் மாவட்டம் வசித்து வருவதாகவும், மேற்படி அலுவலகத்தில் பிப்ரவரி/2024 முதல் IP Camera Operator-ஆக பணிபுரிந்து வருவதாகவும், தனனுடைய பணியானது ஆவணங்கள் பதிவு செய்வது தொடர்பான கேமரா பதிவுகளை ஒரு CD யில் பதிவு செய்து கொடுப்பது என்றும், அலுவலகத்தில் போதிய பணியாளர்கள் இல்லாததால், சார்பதிவாளர் அவர்களின் உத்தரவின்படி பத்திரப்பதிவுக்கு பின்னர் ஆவணங்களை உரியவரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு ஒப்படைககும் வேலைகளை செய்துக்கொண்டிருப்பதாக தெரிவித்தார். மேலும் அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். அந்த மேஜையை சோதனை செய்ய ஆவணங்கள் மட்டும் காணப்பட்டது. அதனை அடுத்து உள்ளே சிறிய ஹாலில் ஸ்டீல் பீரோ காணப்பட்டது. ஸ்டீல் பீரோ மற்றும் மேஜை மீது ஆவணங்கள் அடிக்கி வைக்கப்பட்டிருந்தன. அதனை அடுத்து நேராக பதிவு வைப்பறை இருந்தது. பதிவு வைப்பறையில் பழைய ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்து. பதிவு வைப்பறைக்கு முன்னாள் உள்ள சிறிய வாராண்டாவில் சுவர் ஓரமாக போடப்பட்டிருந்த மேஜையின் சாப்பிடும்போது பயன்படுத்தும் சில்வர் தட்டுக்கள், டிபன்பாக்ஸ் போன்றை காணப்பட்டன. அந்த மேஜையை சோதனை செய்தபோது, சில்வர் தட்டுக்கு கீழே பணம் காணப்பட்டது. அதனை எடுத்து எண்ணிப்பார்க்க அங்கு ரூ.26,000/- (500x52) இருந்தது. அதுப்பற்றி சார்பதிவாளர் அவர்களிடம் விளக்கம் கேட்க, அந்த பணம் அந்த இடத்தில் எப்படி வந்தது என்று, தனக்கு எதுவும் தெரியாது என்று கூறினார். மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோரததால், அந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. கணிணி அறையில் சோதனை செய்தபோது, 4 கணிணிகள் பொறுத்தப்பட்டிருந்தன. அந்த அறையின் செல்பில் ஆவணங்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்தன. அந்த அறையில் கைப்பற்றப்படக்கூடிய பொருட்கள் எதுவும் இல்லை. மேலும் அலுவலகத்தில் இருந்த திருமதி.S.ஷோபனா, க/பெ. ரவி, எண்.3, சிவன்கோவில் தெரு, சின்னக்காவனம், பொன்னேரி என்பவரை விசாரணை செய்ய, தான் பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் தகவல் தொகுப்பு பணியாளராக 2021 முதல் 2023 வரை பணிபுரிந்ததாகவும், தன்னை கும்மிடிப்பூண்டி சார்பதிவகத்திற்கு மாற்றம் செய்ததால், சென்று வர இயலாததால் பணியில் இருந்து நின்று விட்டதாகவும், இப்போது அவர்கள் பொன்னேரி சார்பதிவளாகத்தில் வேலை இருந்தால் தன்னை அழைப்பார்கள் என்றும், அதுபோல இன்று வேலை செய்வதற்காக தன்னை அழைத்ததால் அலுவலகத்திற்கு வந்து தபால்

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL u/s 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act 2018 Continuous...)**

பதிவேடுகள் தேடுவதற்கு உதவி செய்ததாகவும் தான் வேலை செய்து கொடுப்பதற்கு ரூ.50 -யை சார்பதிவாளர் கொடுப்பார் என்றும் தெரிவித்தார். அவரது விளக்கத்தினை கைப்ப எழுதிக்கொடுத்தார். அதேபோன்று அலுவலகத்தில் இருந்த திரு.ஜெகன், வயது-3 த/பெ.ஜெகநாதன். எண்.1/60, பூங்காவனத்தம்மன் கோவில் தெரு, அயத்தூர், வேப்பம்பட் என்பவரை விசாரணை செய்ய, தான் பொன்னேரி சார்பதிவகத்தில் டீ, காபி வாங்கி கொடுக்கு வேலைகளையும், சார்பதிவாளர் சொல்லும் வேலைகளையும், செய்து கொடுப்பேன் என்று இன்று 16.09.2024-ம்தேதி அலுவலகத்திற்கு வந்து வேலைகள் செய்து வந்தாகவும், தா வேலை செய்து கொடுப்பதற்கு சம்பளமாக சார்பதிவாளர் ரூ.500/- கொடுப்பார் என்றும், அவரது விளக்கத்தினை கைப்பட எழுதிக்கொடுத்தார். மேலும், விசாரணைக்காக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகைப்பதிவேடு செப்டம்பர்/2024 நகல், தனிநபர் பணப்பதிவேடு/2024 நகல் ஆகியவை கைப்பற்றப்பட்டது. தனிநபர் பணம் பதிவேட்டில் இன்றைய தினத்தில் சார்பதிவாளர் திரு.குமரேசன் அவர்களின் கையிருப்பு பணம் விவரம் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது. மற்ற பணியாளர்களின் கையிருப்பு பணம் குறித்து எதுவும் பதிவு செய்யப்படவில்லை. 16.09.2024-ஆம்தேதி பொன்னேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் தொடர்பான விவரங்கள் உள்ள Account-A-யை Printout எடுத்து விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தில் பொருத்தப்பட்டுள்ள CCTV கேமரா குறித்து விசாரித்தபோது, IP Camera Operator-ஆக பணிபுரியம் திருமதி.காமாட்சி அவர்கள் கடந்த ஒரு மாதமாக IP Camear இயங்கவில்லை என்றும், இதுதொடர்பாக வாய்மொழி மூலமாக தங்களது நிறுவன பொறியாளரிடம் புகார் அளித்துள்ளதாகவும், இன்னும் சரி செய்யப்படவில்லை என்றும் தெரிவித்தார். இந்த சோதனையின்போது அலுவலகத்தில் கண்டறியப்பட்ட யாரும் உரிமைக்கோராத பணம் ரூ.28,000/-, Data Entry Operator திரு.ஜெயக்குமார் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,000/-, புரோக்கர் திரு.வினோத் என்பவர் வைத்திருந்த பணம் மொத்தம் ரூ.34,720/- மற்றும் அட்டவணையில் வரிசையில் 7 முதல் 11 வரை குறிப்பிடப்பட்டுள்ள பொதுமக்கள் உரிய விளக்கம் கொடுக்காததால் பணியாளர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்று கருதி கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,39,560/- ஆக மொத்தம் பணம் ரூ.2,03,280/- சோதனையின்போது விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்சம் வாங்குவதும், கொடுப்பதும் குற்றம் என்ற பதாகையும் வைக்கப்படவில்லை. இந்த திடீர் கூட்டாய்வின்போது எடுக்கப்பட்ட பொருட்கள் அந்தந்த இடத்திலேயே வைக்கப்பட்டும், அலுவலகத்திற்கும், அலுவலகத்திலிருந்த கோப்புகள் மற்றும் பொருட்களுக்கும் எந்தவித சேதாரம் இன்றி சோதனை செய்யப்பட்டது.

**(FIR content continues to the next page....)**

**(Contents of the F.I.R in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL U/s. 106 BNSS., r/w. 7 & 12 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 Continuous...)**

மேற்குறிப்பிட்ட திடீர் இருத்துறை கூட்டுத்தணிக்கையை ஒரு திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையாக. நான் சொல்ல சொல்ல தலைமை காவலர் 12315 திரு.மணிகண்டன் அவர்களால். காவல் ஆய்வாளர் கொண்டுவந்த மடிக்கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டது. இந்த திடீர் கூட்டுத்தணிக்கை செயல்முறையானது. இன்று 16.09.2024-ஆம் தேதி மாலை சுமார் 04.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 17.09.2024-ஆம் தேதி விடியற்காலை சுமார் 03.00 மணிக்கு முடிக்கப்பட்டது. அதில் கையொப்பம் செய்யப்பட்டுள்ளவர்களான 1) திரு.மு.இ.இராமச்சந்திரமூர்த்தி, காவல் துணை கண்காணிப்பாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர், 2) திருமதி.G.S.தமிழரசி, காவல் ஆய்வாளர். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, திருவள்ளூர். 3) திரு.ச.குமரேசன். வயது-52. த/பெ.சதாசிவம் சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம். பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம். 4) திரு.ருத்ரகோட்டீஸ்வரன். வயது-37. த/பெ.பாலசுப்பிரமணியம். Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம். பொன்னேரி. திருவள்ளூர் மாவட்டம். 5) திரு,R.ஜெயக்குமார். வயது-40. த/பெ.ராகவன். Data Entry Operator, சார்பதிவாளர் அலுவலகம். பொன்னேரி, திருவள்ளூர் மாவட்டம். 6) திருமதி.B.காமாட்சி. வயது-44. க/பெ.பாபு. IP Camera Operator, சார்பதிவாளர் அலுவலகம். பொன்னேரி. திருவள்ளூர் மாவட்டம். 7) ஜெ.சங்கர். தனிவட்டாட்சியர். (நில எடுப்பு-அலகு-IV). சென்னை எல்லை சாலைத்திட்டம். திருவள்ளூர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொறுப்பு). திருவள்ளூர்.

**Honoured Sir,**

I received the above Complaint and Proceedings and registered a case in Thiruvallur V&AC, Cr.No.15/AC/2024/TVL, U/s. 106 BNSS., r/w. 7 & 12 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 17.09.2024 at about 04.30 hrs. The original FIR, Complaint along with the Joint Surprise Check Proceedings of District Deputy Inspection Cell Officer, Statements, Self explanations, attested copy of office records and seized un-accounted/un-explained bribe amount Rs.2,03,280/- at Ponneri Sub-Register Office during the Joint Surprise Check, are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and other copies are forwarded to superior officers concerned on 17.09.2024 at about 05.00 hrs.

17/9/2024

**(G.S.TAMIZHARASI),**
Inspector of Police,
Vigilance and Anti-Corruptiion,
Thiruvallur.

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION